# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஐந்தாம் பத்து

## இரண்டாம் திருமொழி - தாந்தம்
## திருக்கூடலூர்

** தாம் தம் பெருமை அறியார் * தூது
வேந்தர்க்காய * வேந்தர் ஊர் போல் **
காந்தள் விரல் * மென்கலை நன்மடவார் *
கூந்தல் கமழும் * கூடலூரே 1

செறுந்திண் திமில் ஏறுடைய * பின்னை
பெறுந்தண் கோலம் * பெற்றார் ஊர் போல் **
நறுந்தண் தீம் * தேன் உண்ட வண்டு *
குறிஞ்சி பாடும் * கூடலூரே 2

பிள்ளை உருவாய்த் * தயிர் உண்டு * அடியேன்
உள்ளம் புகுந்த * ஒருவர் ஊர் போல் **
கள்ள நாரை வயலுள் * கயல் மீன்
கொள்ளை கொள்ளும் * கூடலூரே 3

கூற்றேர் உருவின் குறளாய் * நிலம் நீர்
ஏற்றான் * எந்தை பெருமான் ஊர் போல் **
சேற்றேர் உழவர் * கோதைப் போதூண் *
கோல் தேன் முரலும் * கூடலூரே 4

தொண்டர் பரவச் * சுடர் சென்று அணவ *
அண்டத்து அமரும் * அடிகள் ஊர் போல் **
வண்டல் அலையுள் * கெண்டை மிளிர *
கொண்டல் அதிரும் * கூடலூரே 5

தக்கன் வேள்வி * தகர்த்த தலைவன் *
துக்கம் துடைத்த * துணைவர் ஊர் போல் **
எக்கலிடு * நுண்மணல் மேல் * எங்கும்
கொக்கின் பழம் வீழ் * கூடலூரே 6

கருந்தண் கடலும் * மலையும் உலகும் *
அருந்தும் அடிகள் * அமரும் ஊர் போல் **
பெருந்தண் முல்லைப் * பிள்ளை ஓடி *
குருந்தம் தழுவும் * கூடலூரே 7

கலை வாழ் பிணையோடு அணையும் * திருநீர்
மலை வாழ் எந்தை * மருவும் ஊர் போல் **
இலை தாழ் தெங்கின் * மேல் நின்று * இளநீர்க்
குலை தாழ் கிடங்கின் * கூடலூரே 8

பெருகு காதல் அடியேன் * உள்ளம்
உருகப் புகுந்த * ஒருவர் ஊர் போல் **
அருகு கைதை மலர * கெண்டை
குருகு என்று அஞ்சும் * கூடலூரே 9

** காவிப் பெருநீர் வண்ணன் * கண்ணன்
மேவித் திகழும் * கூடலூர் மேல் **
கோவைத் தமிழால் * கலியன் சொன்ன *
பாவைப் பாடப் * பாவம் போமே 10

**அடிவரவு:** தாம் செறும் பிள்ளை கூற்றேர் தொண்டர் தக்கன் கருந்தண் கலை பெருகு காவி வென்றி

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---